தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழில் உள்ள உயிர் எழுத்துகள்

அ) 247 ஆ) 30 இ) 12 ஈ) 18

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. யாருக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் ‘பெங்சூற்றர்’ ‘பைல்’ கோட்டைகளைக் கட்டினர்.

அ) பண்டார வன்னியனுக்கு ஆ) ஆங்கிலேயருக்கு
இ) கயிலை வன்னியனுக்கு ஈ) ஒல்லாந்தருக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. பின்வருவனவற்றுள் வினைமுற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஓடிய ஆ)ஓடு இ) ஓடி ஈ) ஓடினாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அல்லல் என்ற சொல் குறித்து நிற்பது

அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) தீமை ஈ) நன்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. ‘ஆறுவது சினம்’ என்று கூறியவர்

அ) திருவள்ளுவர் ஆ) ஔவையார் இ) இளங்கோவடிகள் ஈ) கபிலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்ட இடங்களில் ஒன்று

அ) பொன்பரிப்பு ஆ) யாழ்ப்பாணம் இ) கொழும்பு ஈ) காலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. தமிழின் முதல் அகரமுதலியான சதுரகராதியை எழுதியவர்

அ) மறைமலையடிகள் ஆ) வீரமாமுனிவர்

இ) ஔவையார் ஈ) திருவள்ளுவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. அகம் என்ற சொல்லின் எதிர்ப்பொருட் சொல்

அ) மறம் ஆ) புறம் இ) அறம் ஈ) திறம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. **குறள்:** நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே ______________ நன்று

அ) மறப்பது ஆ) குறைப்பது இ) வெறுப்பது ஈ) ஒறுப்பது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. போர்முரசு கட்டிலில் உறங்கிய புலவர்

அ) ஔவையார் ஆ) இளங்கோவடிகள்

இ) கபிலர் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. நீர் வற்றிய குளங்கள் பாளம்பாளமாக வெடித்துக் காணப்பட்டன. இதில் வந்துள்ள பாளம்பாளமாக என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்கிடுக்குத் தொடர்

இ) அடுக்குத் தொடர் ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. குரங்குகள் உழவரை நோக்கி எறிந்தவை

அ) சங்குகள் ஆ) பலாக்கனிகள் இ) இளநீர்கள் ஈ) மாங்கனிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. வெள்ளைத் தாமரை மலர்ந்திருந்தது. இதில் வந்துள்ள அடைமொழி

அ) தாமரை ஆ) மலர் இ) மலர்ந்திருந்தது ஈ) வெள்ளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. மனச்சாட்சி உறுத்தும். என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி

அ) அடாது செய்தவர் படாது படுவர் ஆ)அக்கரை மாட்டுக்கு இக்கரைபச்சை

இ) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் ஈ) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தரும் எழுத்து

அ) எ ஆ) ஏ இ) ஆ ஈ) ஓ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. விபுலாநந்த அடிகளின் இயற்பெயர்

அ) சேவியர் ஆ) மயில்வாகனன் இ) வரதன் ஈ) தேவநேசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்.

அ) ஞாயிறு　ஆ) திங்கள்　இ) பரிதி　ஈ) கதிரவன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

18. குழலியால் கவிதை எழுதப்பட்டது. இச்சொல்லியத்தில் வந்த வேற்றுமை

அ) இரண்டாம் வேற்றுமை　ஆ) நான்காம் வேற்றுமை

இ) மூன்றாம் வேற்றுமை　ஈ) ஆறாம் வேற்றுமை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

19. உயிரினங்களுக்கு இயற்கை அளித்த சூழல் தொகுதி

அ) நாடு　ஆ) வீடு　இ) மேடு　ஈ) காடு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

20. தமிழே உலகின் முதன்மொழி என்று நிறுவிய அறிஞர்

அ) விபுலாநந்த அடிகள்　ஆ) தனிநாயகம் அடிகள்

இ) தேவநேயப்பாவாணர்　ஈ) மறைமலையடிகள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

21. 34 ஆண்டுகள் வீரமுடன் வன்னியை ஆண்ட மன்னன்

அ) எல்லாளன்　ஆ) சங்கிலியன்

இ) கயிலைவன்னியன்　ஈ) பண்டாரவன்னியன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

22. ஆகா! எவ்வளவு அழகான பூஞ்சோலை! இச் சொல்லியம்

அ) கூற்றுச் சொல்லியம்　ஆ) ஏவற்சொல்லியம்

இ) மெய்ப்பாட்டுச் சொல்லியம்　ஈ) வினாச் சொல்லியம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

23. 'வேழம்' என்ற சொல் குறித்து நிற்பது

அ) யானையை　ஆ) மானை　இ) புலியை　ஈ) சிங்கத்தை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

24. இரட்டைக் கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வாவா　ஆ) நடநட

இ) ஓடுஓடு　ஈ) தடதட

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

25. வன்னியில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள் உறுதிப்படுத்துவது அங்கு வாழ்ந்த இனம்

அ) சிங்களவர் ஆ) தமிழர்

இ) ஆங்கிலேயர் ஈ) ஒல்லாந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. கயிலை வன்னியனுக்கு அஞ்சிக் கண்டிச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற ஐரோப்பியர்

அ) தோமசு கென்றி ஆ) யே.பி. லூயிசு

இ) றொபேட் நொக்சு ஈ) இபன் பற்றுற்றா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. நன்னெறிப் பாடலில் சினத்திற்கு ஒப்பாகக் குறிப்பிடப்படுவது

அ) தீ ஆ) வெள்ளம்

இ) காற்று ஈ) மழை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தோற்கருவிகளுள் ஒன்று

அ) புல்லாங்குழல் ஆ) யாழ் இ) மேளம் ஈ) வீணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. மா + சோலை என்பதைப் புணர்த்தினால்

அ) மாஞ்சோலை ஆ) மாச்சோலை

இ) மாஞ்ச்சோலை ஈ) மாசோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கல்மேல் எழுத்துப் போல் என்றும் அழியாமல் இருப்பது

அ) பணம் ஆ) பொருள் இ) கல்வி ஈ) செல்வம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. இறைநெறிப் பொதுமைக் காப்பியம் என்ற சிறப்பிற்குரிய நூல் எது?

2. கயிலைவன்னியன் காலத்தில் வன்னி எத்தனை பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது?

3. கண்ணும் இமைக்காமல் நித்திரை கொள்ளாமல் காவல் புரிபவன் யார்?

4. ஈழத்திலே எந்தெந்த இடங்களில் பண்டைய தலைநகரங்கள் கண்டறியப்பட்டுள்ளன?

5. பழந்தமிழரான நாகர்களுக்கும் வன்னி மண்ணுக்கும் உள்ள தொடர்புகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் இரண்டு தருக?

6. விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டுமென்று திருக்குறள் கூறுகிறது?

7. விபுலாநந்த அடிகள் எழுதிய நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழு விடை தருக.

ஒவ்வொருவருக்கும் கல்வி இன்றியமையாதது. இவ்வுலகில் நாம் வாழ்வதற்குத் தேவையான அறிவினைத் தருவது கல்வியே ஆகும். இத்தகைய கல்வி அறிவினை நாம் இருவழிகளில் பெற்றுக்கொள்ள முடியும். கேட்டல் மூலமும் நூல்களைக் கற்பதன் மூலமும் அறிவினைப் பெற முடியும். கற்றறிந்தவரிடம் கேட்டு அறிவைப் பெறுதல் கேள்வி அறிவு எனப்படும். நல்ல நூல்களைக் கற்று அறிதல் கல்வி அறிவு எனப்படும். கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறுவர். ஏனெனில் அழியாத செல்வமான கல்விச் செல்வம் அவனிடம் இருப்பதுதான் கரணியம். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என அதிவீரராம பாண்டியன் என்பவர் நறுந்தொகை என்னும் நூலில் கூறியுள்ளார். இதில் இருந்து கல்வியின் இன்றியமையாமையை நாம் புரிந்துகொள்ளலாம். எனவே இத்தகைய சிறப்புடைய கல்வியைக் கற்று வாழ்க்கையில் உயர்வடைவோம்.

1. நாம் எவற்றின் மூலம் அறிவினைப் பெற முடியும்?

_______________________________________________

_______________________________________________

2. கேள்வி அறிவு என்றால் என்ன?

_______________________________________________

_______________________________________________

3. சென்ற இடமெல்லாம் சிறப்புக்குரியவர் யார்?

_______________________________________________

_______________________________________________

4. ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது எனக் கூறப்படுவது எது?

_______________________________________________

_______________________________________________

5. நறுந்தொகை என்ற நூலை எழுதியவர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

**4) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் சொற்களோடு உடன் என்ற உருபைச் சேர்த்து எழுதுக.

அவள் + உடன் = ____________________

நான் + உடன் = ____________________

நீங்கள் + உடன் = ____________________

2. வினா எழுத்துகள் எத்தனை? மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துகள் எவை?

____________________________________________________________

____________________________________________________________

3. தரப்பட்டுள்ள அடுக்குத் தொடர்களின் பொருள் விளங்குமாறு கருத்துள்ள சொல்லியங்கள் எழுதுக.

மெல்லமெல்ல :- ____________________________________________

____________________________________________

கூட்டங்கூட்டமாக :- ____________________________________________

____________________________________________

புதுப்புது :- ____________________________________________

____________________________________________

4. அவன் வீட்டிற்குச் சென்றான். இச் சொல்லியத்தை எதிர்மறைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

____________________________________________________________

____________________________________________________________

5. ‘பவளம் போன்ற வாய்’ என்ற உவமைத் தொடரில் வரும் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை எழுதுக.

உவமானம் :- ______________________

உவமேயம் :- ______________________

பொதுத்தன்மை :- ______________________

புள்ளிகள் 15

**4) தரப்பட்டுள்ள சொற்களை பொருத்தமாக வைத்து கவிதையை முழுமை ஆக்குக.**

## உன் கடமை

| | | | | |
|---|---|---|---|---|
| துணிந்தபடி | ஒழுங்காய்ச் | உறுதி | எதிலும் | தந்தையும் |

கற்றவர் சொல்லி வைத்தபடி - நீ

கடமையை ______________ செய்துமுடி

தாயும் ______________ சொன்னபடி

தமிழனாய் வாழ்வாய் நல்லபடி

எங்கும் ______________ ஏற்றபடி

என்றும் வாழ்வாய் ______________

உள்ளத்தில் ______________ கொண்டபடி

உலகில் வாழ்ந்திடு சிறந்தபடி

**புள்ளிகள் 10**

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Vand er det vigtigste for menneskets overlevelse i verden. Vi får det nødvendige vand fra flod, sø og brønd. Vi kan ikke overleve uden vand. Al liv vil uddø uden mad. Solen hjælper os med at få vand.

Human need water to live in this world. We can obtain water from the river, pond and well. If there is no water we won't be able to live. Living things will die without food. In order to live the Sun gives us water.

Pour que l'homme survive sur terre, l'eau est indispensable. Nous nous procurons de l'eau, d'un lac, d'une rivière, d'un puit. Sans eau, nous ne pouvons pas survivre. Les êtres-vivants peuvent mourir sans être alimenté. Pour que nous puissions survivre, ce qui nous aide, c'est le soleil.

Um auf dieser Welt zu überleben, benötigt der Mensch Wasser. Das für uns benötigte Wasser besorgen wir uns aus dem Fluss, See, Brunnen oder ähnlichem. Wenn wir kein Wasser bekommen würden, könnten wir nicht überleben. Lebewesen sterben ohne Nahrung aus. Die Sonne hilft uns zum Überleben, indem sie uns das Wasser gibt.

Water is nodig om een mens in leven te houden. Het nodige water halen we uit een waterput, rivier en uit een sloot. Zonder water kunnen we nooit leven. Zonder voedsel overlijden de zielen. De zon geeft ons water om in leven te blijven.

Tra le fonti di essenziale necessità per l'uomo vi è l'acqua. L'acqua a noi necessaria la possiamo ricavare da fiumi, laghi e pozzi. Non possiamo vivere senza acqua. Gli esseri viventi non vivono senza cibo. Il sole ci permette di vivere dandoci l'acqua.

Vann er den viktigste kilden til menneskelivet her på jorda. Det vannet vi trenger, får vi fra innsjøer,elver og brønner. Uten vann kan vi ikke overleve. Uten mat vil det ikke eksistere noe liv på jorda. Sola er med på å gi vannet som er nødvendig for livet.

För att människan ska kunna leva på jorden krävs vatten. Vi tar det vattnet som vi behöver från sådana ställen som sjön, dammar och brunn. Om vi inte får vatten kan vi inte leva. Utan mat utrotas organismer. För att vi ska leva är det solen som är hjälpsam och ger oss vatten.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- விபுலாநந்த அடிகள்
- எனது தாயகம்
- வீரஞ் செறிந்த வன்னியும் தமிழரசும்

புள்ளிகள் 20